## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் சாதாரண கூட்டம் **திருவள்ளுவர் ஆண்டு 2053 துலை மாதம் (ஐப்பசி) 4ம் நாள்** , 2022-ம் ஆண்டு **அக்டோபர் மாதம் 21 ஆம் தேதி வெள்ளிகிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

**பொருள் எண்.1.**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை அரசு ஆணை (நிலை) எண்.92, நாள்.03.07.2007ன்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான சத்திரம் ரோடு வடக்கு முகமாக உள்ள (அம்மா உணவகம் அருகில்) கடை எண்.12க்கு, 13.10.2022ம் தேதியன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளி எவரும் கொடுக்கவில்லை. கீழ்கண்ட விவரப்படி உள்ள நபர்கள் மட்டுமே ஏலம் கோரியுள்ளனர்.

| வ. எண் | கடை விபரம் | பெயர் | மறு ஏலத்தில் உயர்ந்த கேள்வியாக மாத வாடகை கோரியது ரூ. | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | சத்திரம் ரோடு வடக்கு பார்த்த கடை எண்.12 | திரு.எ.சதிஸ்குமார், பு.புளியம்பட்டி | 6500/– | ஒப்பந்தப்புள்ளி எவரும் கொடுக்கவில்லை |
| | | திருமதி.என்.நதியா, பு.புளியம்பட்டி | 6450/– | |

**(ந.க.எண்.547/2020/அ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி கடைக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் திரு.எ.சதிஸ்குமார், பு.புளியம்பட்டி என்பவர் ரூ.6500/-க்கு மாத வாடகையாக உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார். மேற்படி நபருக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.163**

**<u>பொருள் எண்.2.</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக நான்கு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.10.2022 முதல் 31.10.2022 வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 31.10.2022 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.11.2022 முதல் 30.11.2022 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண்.387/2017/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.164**

**<u>பொருள் எண்.3</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/P3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.06.06.2019ன் படி பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.04.2022 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஒரு மாதம் (01.10.2022 முதல் 31.10.2022 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.11.2022 முதல் 30.11.2022 வரை) விபிஎன் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.25/2016/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.165**

**பொருள் எண்.4**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.11.2022 முதல் 30.11.2022 வரை திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.166**

**பொருள் எண்.5**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ரீ.ச.எண்.7/2B,3B,4B-ல் 2.35ஏக்கர் அல்லது 9500.00ச.மீ பரப்பளவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு இடத்திற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண்.4716/2021/ஈமா2 நாள்.22.07.2022ல் மனைப்பிரிவுக்கு நிபந்தனைகளுடன் கூடிய மனைப்பிரிவு எண்.ம.வ/ஈ.மா/227/2022ன்படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். மனுதாரர் திரு.K.லோகநாதன் அவர்கள் மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது இடங்கள் நகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பதிவுத்துறையில் பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். அன்னார் மேற்கண்ட மனப்பிரிவில் சாலை வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி 3% மார்க்கெட் மதிப்பு கட்டணம் செலுத்திய பின் மேற்கண்ட மனைபிரிவிற்கு இறுதி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1514/2022/எப்1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.167**

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் – 2021–2022ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி கட்டுதல் பணிக்காக 07.10.2022 அன்று முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off Line-ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 07.10.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி கட்டுதல் பணி | 35.00 இலட்சம் | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 0.11% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 1.35% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.11% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி அவர்களின்ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1337/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**

**தீர்மான எண்.168**

**பொருள் எண்.7**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு **AMRUT 2.0** திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள், வரைபடங்கள், திட்ட அறிக்கைகள் தயார் செய்து தொழில்நுட்ப அனுமதி பெற்றுத்தர தனியார் கலந்தாலோசகர் (Consultant) நியமித்தல் பணிக்காக 28.09.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | **AMRUT 2.0** திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள், வரைபடங்கள், திட்ட அறிக்கைகள் தயார் செய்து தொழில்நுட்ப அனுமதி பெற்றுத்தர தனியார் கலந்தாலோசகர் (Consultant) நியமித்தல் | 35.00 இலட்சம் | Conquer Technologies, Chennai | 0.14% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | APMS Constructions & Interiors,Bangalore | 1.43% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.14% குறைவாக வழங்கியுள்ள Conquer Technologies, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1299/2020/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.169**

**ஆணையாளர்,**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.**

<u>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் அவசர கூட்டம் **திருவள்ளுவர் ஆண்டு 2053 துலை மாதம் (ஐப்பசி) 4ம் நாள்** , 2022-ம் ஆண்டு **அக்டோபர் மாதம் 21 ஆம் தேதி வெள்ளிகிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

**<u>பொருள் எண்.01</u>**

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வட்டாரத்திற்குட்பட்ட புன்செய்ப் புளியம்பட்டி பேரூராட்சியானது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் பவானிசாகர் ஒன்றியத்திற்கு சொந்தமான புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குள் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, புன்செய்ப் புளியம்பட்டி, இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் ஜெ.ஜெ.நகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் உள்ள கட்டிடத்தினை புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2805/2022/அ2 நாள்.13.10.2022ன் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1727/2022/எப்1)**
**அலுவலகக்குறிப்பு :-**
மன்றம் பதிவு செய்யலாம்.
**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.170**

**<u>பொருள் எண்.02</u>**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 24-B-24-Hன் படி வார்டு குழுக்கள் மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும் அதன் செயல்பாடுகளுக்கும் விதிகள் அரசாணை நிலை எண்.92 மற்றும் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022ல் உருவாக்கப்பட்டு பொதுமக்களின் அடிப்படை மற்றும் அத்தியாவசியப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக ஒரு வார்டினை 4 பகுதிகளாக பிரித்து 4 வார்டு குழு உறுப்பினர்கள் வார்டு விகிதம் தேர்வு செய்வதற்கு ஏதுவாக வார்டு குழு எல்லைகள் கீழ்கண்ட விபரப்படி பிரிக்கப்பட்டுள்ளது. வார்டு குழு எல்லைகள் மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1365/2021/சி1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.171**

**ஆணையாளர்,**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.**